ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2006/13 - 2017 පෙබරවාරි මස 13 වැනි සඳුදා - 2017.02.13

*2006/13 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 25/73.*

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41ஆம் பிரிவின்கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

தயாசிறி ஜயசேகர (சட்டத்தரணி),
விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2017,* பெப்புருவரி *09.*

**ஒழுங்குவிதிகள்**

*2016* ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் *27* ஆந் திகதிய *1990/23* ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட *2016* ஆம் ஆண்டு *01* ஆம் இலக்க, தேசிய விளையாட்டுக் கழகங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அவற்றின் 3 (2) ஆம் ஒழுங்குவிதியில், "சர்வதேச விளையாட்டுச் சம்மேளனத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சர்வதேச விளையாட்டுச் சம்மேளனங்கள் எவையேனுமிருப்பின் அவற்றின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவற்றின் 5 (1) (அ) என்னும் ஒழுங்குவிதியில்,

(அ) அதன் (i) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

"(i) தலைவர் மற்றும் துணைத்தலைவர்கள், துணைத்தலைவர்களுள் ஒருவர், குழுக் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்டிராத இயைபான பாடசாலைக் கழகங்களின் பிரதிநிதியொருவராக இருத்தல் வேண்டும் ;" ;

(ஆ) அதன் (iii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

"(iii) *1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கியொன்றில் அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழிற் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் அல்லது 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைத் தாபனத்தில் அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கம்பனியில் முகாமைக் கணக்காளராக அல்லது கணக்கீட்டு எழுதுவினைஞர் ஒருவராகக் குறைந்தபட்சம் ஓராண்டுக்கால அனுபவத்தையேனும் கொண்ட ஆளொருவராக இருக்க வேண்டிய பொருளாளர்;*" ;

*(3)* 5 (2) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (ii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

"(ii) *நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், ஒரு மேலதிகக் காலப்பகுதிக்கு மீண்டும் தெரிவு செய்யப்படத் தகுதியடையவராதலும் வேண்டும் ;*

*ஆயின், பதவிதாங்குநரொருவர் ஒழுக்காற்றுக் காரணங்களின்பேரில் ஒழுக்காற்றுக் குழுவினால் அகற்றப்பட்டாலொழிய, மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.*" ;

*(4)* அதன் 5 (4) ஆம் ஒழுங்குவிதியில் :-

(அ) அதன் (ஔ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஔ) *பெயர் நியமனங்கள் சமர்ப்பிக்கப்படுதலுக்கு முன்னரான ஓராண்டுக் காலப்பகுதியின் போது, அவர், அந்தத் தேசியவிளையாட்டுக் கழகத்தின் விளையாட்டுக்களின் தீர்ப்பளிப்பவர், நடுவர், நடுத்தீர்ப்பாளர் அல்லது ஒரு தனிப்பட்ட வீரரின் அல்லது ஆட்டக்குழுவின் பயிற்றுவிப்பவர் ஒருவராகப் பணியாற்றியிருப்பின் ;*" ;

(ஆ) அதன் (க) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(க) *பெயர் நியமனங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரான ஓராண்டுக் காலப்பகுதியின் போது, அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டுப் பொருட்களை, விளையாட்டுத் துணைப்பொருட்களை அல்லது அத்தகைய விளையாட்டுத் தொடர்பான ஏதேனும் துணைக்கருவியை அல்லது சாதனத்தை விற்பனை செய்வதில் அல்லது வழங்குவதில் அல்லது விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலைகளை நடாத்துவதில் ஈடுபட்டிருப்பின் அல்லது அத்தகைய விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட நிதிச் சேவைகளை வழங்குவதில் சம்பந்தப்பட்டிருப்பின் ;*" ;

(இ) (ட) என்னும் பந்தியில் "நான்கு வருட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஓராண்டு" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(ஈ) அதன் (ண) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ண) *பொருளாளர் அல்லது உதவிப் பொருளாளர் நீங்கலாக, அக்கழகத்தினால் பதிவு செய்யப்பட்ட, ஊக்குவிக்கப்பட்ட, நடாத்தப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதானமான சுற்றுப்போட்டியில், பந்தயப் போட்டியில் அல்லது போட்டியில், ஓர் ஆட்டக்குழு விளையாட்டுக்காக இரு தடவைகளுக்கு மேற்பட அல்லது தனிப்பட்ட நிகழ்ச்சி அல்லது விளையாட்டுக்காக ஒரு தடவைக்கு மேற்பட அந்தந்த விளையாட்டுக்களில் பங்குபற்றியிராதிருப்பின் அல்லது இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியிராதிருப்பின் ;*"

(உ) அதன் (ம) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ய) *ஆணை வழங்கப்படுதல் மறுக்கப்பட்டுள்ள ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராகவிருப்பின்;*

(ர) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பணம் தூய்தாக்கல் என்ற தவறுக்காக அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படின், ;'' ;

(5) அதன் 5 (5) ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும் :-

''(6) ஒரு கழகத்தின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது பொருளாளர் என்ற பதவியை வகிக்கின்ற ஆளொருவர், தலைவர் அல்லது செயலாளர் அல்லது பொருளாளர் என்ற பதவி தவிர மற்றைய கழகங்களுள் எவற்றிலும் பதவியொன்றை வகிப்பதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும் :'' :

(6) 6 ஆம் ஒழுங்குவிதியில், ''(6) இந்த ஒழுங்குவிதி'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''6. இந்த ஒழுங்குவிதி'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(7) 7 ஆம் ஒழுங்குவிதியில்,

(அ) ''7. ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும்'' என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக ''7. (1) ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (xiv) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

''(xiv) (அ) வருடாந்தப் பொதுக் கூட்டமொன்றில், தேசிய விளையாட்டுக் கழகத்தினது குழுவின் பதவிதாங்குநர்களையும், தீர்மானம் மேற்கொள்ளும் குழு, எண்வரிசைப்படுத்தும் குழு அல்லது தரவரிசைப்படுத்தும் குழு, தொழில்நுட்பக் குழுக்கள், நிதிக் குழு மற்றும் ஒழுக்காற்றுக் குழு என்பவற்றுக்கான உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடாத்துதல் ;

(ஆ) தேர்தல் குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு விசேட பொதுக் கூட்டமொன்றை நடாத்துதல் ;

(இ) தெரிவுக் குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் ;'';

(இ) அதன் (xvii) ஆம் விடயத்தில், ''நாற்பது நாட்களுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினான்கு நாட்களுக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஈ) அதன் 7 (1) ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-

''(2) பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகம் ஒவ்வொன்றும், அவற்றின் அந்தந்தச் சர்வதேச சம்மேளனத்திடம் அல்லது கழகத்திடம் பதிவு செய்துகொள்வதற்குத் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ள வேறெவையேனும் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் வேறு ஒழுங்கமைப்புக்கள், அந்தந்தச் சர்வதேச சம்மேளத்திடம் அல்லது கழகத்திடம் பதிவு செய்துகொள்வதற்கு உரித்துடையனவாதலாகாது.'' ;

(8) 10 ஆம் ஒழுங்குவிதியில், ''மெய்வல்லுநர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், ''மெய்வல்லுநர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''மெய்வல்லுநர்'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(9) அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல், ''3. உடற்கட்டுமானம், 22. உயிர்காப்பு, 23. குத்துச்சண்டை, 37. மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுக்கள்,, 43. ஈக்வஸ்ட்டேறியன், 48. வாள் சண்டை, 50. செப்பாக்ட்டறோ, 52. மொடன் பென்டாத்லன், 55. கோகோ'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக முறையே ''3. உடற்கட்டுமானம், 22. உயிர்காப்பு, 23. குத்துச்சண்டை, 37. மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுக்கள், 43. ஈக்வஸ்ட்டேறியன், 48. வாள் சண்டை, 50. செப்பாக்ட்டறோ, 52. மொடன் பென்டாத்லன், 55. கோகோ'' என்னும் சொற்களையும், எண்களையும் இடுவதன் மூலமும் :

(10) அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை III இல்,

(அ) அதன் (எ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன்மூலமும் ;

(ஆ) (ஞ) என்னும் பந்தியில், “நியமனம், நீக்கல்”, என்னும் சொற்களுக்குப் பதிலாக “தேர்தல் அல்லது தெரிவு, அகற்றுகை” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) (ர) என்னும் பந்தியில், “மெய்வல்லுநர் குழு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “மெய்வல்லுநர் குழு” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் .

03- 15

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.